**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர்-நாராயணசாமி**

**தேதி 15.3.2025 நேரம் மாலை 6.10 மணி**

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடியின் 120-ஆவது மனதின் குரல் நிகழ்ச்சிக்கு பொது மக்கள் தங்களது கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வரும் 28-ஆம் தேதிக்குள் தெரிவிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மின்னணுவியல், தகவல் தொடர்பு மற்றும் டிஜிட்டல் உள்கட்டமைப்பு உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் நாடு வேகமாக வளர்ந்து வருகிறது என்று மத்திய அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறி உள்ளார்.

சர்வதேச நுகர்வோர் உரிமை தினம் இன்று கொண்டாடப்படுகிறது

புதுச்சேரி காவல்துறை சார்பில் பொது மக்கள் குறை தீர்ப்பு முகாம் இன்று நடைபெற்றது.

*மன் கி பாத்*

பிரதமர் திரு நரேந்திர மோடி தமது எண்ணங்களை மக்களிடையே பகிர்ந்து கொள்ளும் மன் கி பாத் எனும் மனதின் குரல் நிகழ்ச்சியின் 120-ஆவது பதிப்பு வரும் 30-ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை ஆகாஷ்வானி மற்றும் தூர்தர்ஷனின் அனைத்து அலைவரிசைகளிலும் ஒலிபரப்பாக உள்ளது. பொது மக்கள் தங்களது கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வரும் 28-ஆம் தேதிக்குள் 1800 11-7800 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண் வாயிலாகவோ, அல்லது நமோ செயலி மற்றும் மை-கவ் இணையதளம் வாயிலாகவோ தெரிவிக்கலாம்.

*அமித் ஷா*

3 நாள் பயணமாக அஸ்ஸாம் சென்றுள்ள மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, அம்மாநில முதலமைச்சர் திரு ஹிமந்த பிஸ்வ சர்மா மற்றும் மத்திய துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழி போக்குவரத்து துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் முன்னிலையில் கோலாகாட் மாவட்டத்தில் கட்டப்பட்டுள்ள அதிநவீன லச்சித் பர்புகான் காவலர் பயிற்சி பள்ளியை இன்று திறந்து வைத்து, காவலர் குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

*அஸ்வினி வைஷ்ணவ்*

மத்திய ரயில்வே, தொழில் நுட்பம் மற்றும் தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் இன்று தமிழ்நாடு ஸ்ரீபெரும்புதூரில் புதிய ஜெட் ஒர்க் எலக்ட்ரானிக்ஸ் வளாகத்தை திறந்து வைத்தார். அப்போது பேசிய அவர் பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையில் மின்னணுவியல், தகவல் தொடர்பு மற்றும் டிஜிட்டல் உள்கட்டமைப்பு உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் நாடு வேகமாக வளர்ந்து வருகிறது என்று கூறினார். மின்னணு பொருட்கள் ஏற்றுமதியில் இந்தியா 2-ஆவது இடத்தில் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடையே பேசிய திரு அஸ்வினி வைஷ்ணவ் மத்திய அரசு தமிழ்நாட்டில் முதலீடு செய்யப்படுவதை ஊக்குவிப்பதாக கூறினார். மேலும் அதிவேக ரயில் பயணத்திற்கான ஹைப்பர் லூப் சோதனை நிலையில் இருந்தாலும் அது ஒரு பெரிய தொலை நோக்கு பார்வை கொண்ட மிக முக்கியமான முயற்சி என்று தெரிவித்த அமைச்சர், ரயில்வே அமைச்சகமும் சென்னை இந்திய தொழில் நுட்ப நிறுவனமும் இந்த திட்டத்தை ஆதரிப்பதாக கூறினார்.பின்னர் ஹைப்பர் லூப் ரயில் திட்டம் சோதிக்கப்படும் தையூரையும் பார்வையிட்டு அங்குள்ள குழுவினரிடம் உரையாடினார்.

மாணவர்களால் உருவாக்கப்படும் புதிய கண்டுபிடிப்புகளுக்கு அரசு முழு ஆதரவு அளிக்கும் என்று மத்திய அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். தையூரில் ஐஐடி உருவாக்கிய ஹைப்பர் லூப் திட்டத்தில் ஈடுபட்டுள்ள மாணவர்களுடன் கலந்துரையாடிய அவர் புதுமையான தொழில் நுட்பங்களில் முன் மாதிரிகளை உருவாக்குவதில் கவனம் செலுத்துமாறு மாணவர்களைக் கேட்டுக் கொண்டார். அம்ரித் திட்டத்தின் கீழ் 77 ரயில் நிலையங்கள் புதுப்பிக்கப்படும் என்று தெரிவித்த அவர் தமிழ்நாட்டில் 715 ரயில்வே மேம்பாலங்கள் கட்டப்பட்டு வருவதாகவும் 8 வந்தேபாரத் ரயில்கள் இயக்கப்படுவதாகவும் கூறினார். 200 கோடி ரூபாய் செலவில் 15 ஏக்கர் நிலத்தில் ஜெட் ஒர்க் மின்னணு தொழில் நிறுவனம் உருவாக்கப்பட்டு, அதில் 10-ஆம் வகுப்பு மற்றும் 12-ஆம் வகுப்பு முடித்த 8 ஆயிரம் பேர்களுக்கு 8 மாதங்களில் வேலை வாய்ப்பு வழங்கப்படும் என்றும் தெரிவித்தார். வேலை வாய்ப்பில் 80 சதவிகிதம் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

*எல் முருகன்*

நாடாளுமன்ற விவகாரங்கள், மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் திரு எல் முருகன் இன்று காரைக்கால் திருநள்ளாறு ஸ்ரீதர்பாரண்யேஸ்வரர்

கோலில் சாமி தரிசனம் செய்தார். பின்னர் காரைக்கால் மாவட்டதில் உள்ள அகில இந்திய வானொலி நிலைய அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். முன்னதாக காரைக்கால் மாவட்ட ஆட்சியர் திரு சோமசேகர் அப்பாராவ், முதுநிலை காவல் கண்காணிப்பாளர் திருமதி லட்சுமி சௌஜன்யா மற்றும் அரசு அதிகாரிகள் உள்ளிட்டோர் அமைச்சருக்கு சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

*சர்வதேச நுகர்வோர் தினம்*

சர்வ தேச நுகர்வோர் உரிமை தினம் இன்று கொண்டாடப்படுகிறது. நீடித்த வாழ்க்கை முறைகளுக்கான மாற்றங்கள் என்ற கருப்பொருளின் அடிப்படையில் நாடு முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

நுகர்வோர் பாதுகாப்பை மத்திய அரசு உறுதி செய்வதில் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவதாக மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார். இணையதள கருத்தரங்கில் இன்று உரையாற்றிய அவர் நுகர்வோர் வளத்திற்கும், பாதுகாப்பிற்கும் அரசு முன்னுரிமை அளித்து வருவதாக கூறினார். முறைகேடான வர்த்தக நடவடிக்கைகளால் பாதிக்கப்படாத வகையில் தேசிய நுகர்வோர் உதவி எண் நுகர்வோரின் பாதுகாப்பை உறுதி செய்வதாகவும் திரு ஜோஷி எடுத்துரைத்தார்.

இந்நாளை முன்னிட்டு மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் விடுத்துள்ள செய்தியில் சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களை குறைந்த செலவில் உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி உள்ளார்.

*புதுச்சேரி-குறை தீர்ப்பு முகாம்*

புதுச்சேரியில் மேட்டுப்பாளையம், மங்கலம். தகவளக்குப்பம், உள்ளிட்ட பகுதிகளிலும் மாகேவிலும் காவல்துறை சார்பில் பொது மக்கள் குறை தீர்ப்பு முகாம் நடைபெற்றது. முகாமில் 51 பெண்கள் உட்பட 275 பேர் கலந்து கொண்டனர். இதில் 52 புகார்களுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டது. நிலுவையில் உள்ள புகார்களுக்கு விரைவாக நடவடிக்கை எடுக்கும் வகையில் காவல் நிலைய அதிகாரிகளுக்கு மூத்த அதிகாரிகள் வழிகாட்டுதலை வழங்கினார்கள். இதுகுறித்து கூடுதல் தகவல் தருகிறார் புதுச்சேரி கிழக்கு பிரிவு காவல் துறை கண்காணிப்பாளர் திரு ரகுநாயகம்............

(வாய்ஸ்)

*குறை தீர்ப்பு முகாம்*

இன்று காரைக்கால் கோட்டுச்சேரி காவல் நிலையத்தில் நடைபெற்ற மக்கள் குறை தீர்ப்பு முகாமில் 30-க்கும் மேற்பட்ட பொது மக்கள் தங்களது மனுக்களை அளித்தனர். விவசாய நிலங்களில் பன்றிகளின் தொல்லைகளைத் தடுக்கவும், பாசன வாய்க்காலில் கோழிக் கழிவுகளை கொட்டியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரியும், போதைப் பொருள் நடமாட்டத்தை கட்டுப்படுத்துதல் உள்ளிட்ட புகார்கள் அளிக்கப்பட்டன. புகார்களைப் பெற்றுக் கொண்ட முதுநிலை காவல் துறை அதிகாரிகள் கூடிய விரைவில் புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தனர். மேலும் காரைக்கால் காவலன் செயலியைப் பயன்படுத்தி மக்கள் புகார் அளிக்கலாம் என்றும் புகார் அளிப்பவர்களின் விவரங்கள் யாருக்கும் பகிராத வண்ணம் பாதுகாப்பாக வைக்கப்படும், என்றும் உறுதி அளிக்கப்பட்டது.

காரைக்கால் நகர காவல் நிலையத்தில் நடைபெற்ற மற்றொரு மக்கள் மன்ற நிகழ்ச்சியில் 20-க்கும் மேற்பட்ட பொதுக்கள் தங்களது புகார் மனுக்களை அளித்தனர்.

*திருமுருகன்*

புதுச்சேரி குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு பிஆர்என் திருமுருகன் நேற்று இரவு 9 மணி அளவில் காரைக்கால் மாவட்டம் வடக்கு தொகுதிக்கு உட்பட்ட கீழகாசாக்குடி பகுதியில் திடீர் ஆய்வு மேற்கொண்டார். அங்குள்ள பொது மக்களிடம் குறைகளைக் கேட்டு அறிந்த அவர் விரைவில் அனைத்து கோரிக்கைகளும் நிறைவேற்றப்படும் என்றும் உறுதி அளித்தார்.

*பத்ம விருதுகள்*

அடுத்த ஆண்டு குடியரசு தினத்தன்று அறிவிக்கப்படும் பத்ம விருதுகள் 2026-க்கான பரிந்துரைகள் இன்று தொடங்கி உள்ளன. பரிந்துரைகள் வரும் ஜூலை 31-ஆம் தேதிக்குள் ராஷ்டிரிய புரஸ்கார் போர்ட்டலில் ஆன்-லைனில் மட்டுமே பெறப்படும். கலை, இலக்கியம் மற்றும் கல்வி, விளையாட்டு, மருத்துவம், சமூகப் பணி, அறிவியல் மற்றும் பொறியியல் உள்ளிட்டத் துறைகளில் சிறந்த அல்லது விதிவிலக்கான சாதனைகளுக்கு பத்ம விருதுகள் வழங்கப்படுகின்றன.

*கிரிக்கெட்*

மகளிர்-பிரிமியர் லீக் 20-20 கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டம் இன்று இரவு 8 மணிக்கு மும்பையில் நடைபெறுகிறது. இதில் டெல்லி-கேபிடல்ஸ் அணி, மும்பை இண்டியன்ஸ் அணியை எதிர்கொள்கிறது.

*சுனிதா வில்லியம்ஸ்*

சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தில் உள்ள சுனிதா வில்லியம்ஸ், பட்ச் வில்மோர் உள்ளிட்ட 7 பேர் விண்வெளியில் இருந்து அழைத்து வருவதற்கென விண்கலம் வெற்றிகரமாக செலுத்தப்பட்டுள்ளதாக நாசா கூறி உள்ளது. இந்த விண்கலம் 28 மணி நேர பயணத்திற்கு பின்னர் விண்வெளி ஆய்வு மையத்தை எட்டும் என்றும் அதன் பின்னர் சுனிதா வில்லியம்ஸ் உள்ளிட்டோர் அழைத்து வரப்பட உள்ளதாக இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் திரு வெங்கடேஸ்வரன் கூறி உள்ளார்.

*டென்னீஸ்*

தாய்லாந்தில் நடைபெற்ற சர்வதேச மகளிர் டென்னீஸ் போட்டியில் இந்தியாவின் வைதேசி சவுதாரி- ஸ்ரீவள்ளி இணை பட்டம் வென்றது. இரட்டையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் இந்த இணை, 6-க்கு 3 என்ற செட் கணக்கில் தாய்லாந்தில் புன்னின், ஜப்பானின் யுகி நைட்டோ இணையை வென்றது.

*செஸ்*

சர்வதேச இணைய செஸ் போட்டியில் இந்தியாவின் அர்ஜுன் எரிக்கேசி பட்டம் வென்றார்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடியின் 120-ஆவது மனதின் குரல் நிகழ்ச்சிக்கு பொது மக்கள் தங்களது கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வரும் 28-ஆம் தேதிக்குள் தெரிவிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மின்னணுவியல், தகவல் தொடர்பு மற்றும் டிஜிட்டல் உள்கட்டமைப்பு உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் நாடு வேகமாக வளர்ந்து வருகிறது என்று மத்திய அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறி உள்ளார்.

சர்வதேச நுகர்வோர் உரிமை தினம் இன்று கொண்டாடப்படுகிறது

புதுச்சேரி காவல்துறை சார்பில் பொது மக்கள் குறை தீர்ப்பு முகாம் இன்று நடைபெற்றது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 15.3.2025/Script/

---------------------